# முரசொலி

பக்கங்கள் ஆறு    விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 14 பிரசோற்பத்தி பங்குனி 07 (20.03.1992) வெள்ளி


## தூதரக முகவரியில் கடத்தல் கொழும்பு வர்த்தகர் கைது

89 லட்சம் ரூபா பெறுமதியான தைக்கப்பட்ட ஆடைகள், மின் சாதனங்கள் என்பனவற்றை கொள்கலனில்மறைத்து வைத்துகடத்த முயன்ற கொழும்பு வர்த்தகர் ஒருவர் கொழும்புநீதிபதியால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். கொழும்பிலுள்ள மேற்கு நாட்டு தூதரகத்திற்கு முகவரியிடப் பட்டு வந்த இக்கொள்கலன் தொடர்பாக சுங்கப்பகுதியினர் விசாரித்தபோது அத்தூதரகம் கொள்கலன் குறித்து உரிமை பாராட்டவில்லை தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டபோதே இதை இறக்குமதி செய்த வர்த்தகர் கண்டு பிடிக்கப்பட்டார்

06 ஆம் பக்கம் பார்க்க

# சமாதானக்குழுக்களுடன் பேசினும் உரிமையை விட்டுவிட முடியாது!

## கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் பரா

அரசாங்கத்தினுடனும் தென்னிலங்கையில் இருந்து வரும் நல்லெண்ண குழுக்களுடனும், இங்கு வரவிருக்கும் பௌத்த பிக்குகளுடனும் நாம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம் ஆனால் எமது உரிமைகளையோ நியந்தனைகளையோ விட்டுக்கொடுக்க மாட்டோம்'

இவ்வாறு நேற்றிரவு அரியாலை ஐரசிப்பிள்ளை அரங்கில் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் திரு. பரா உரையாற்றும் போது தெரிவித்தார்.

எமது போராட்டம் மரபு வழியாகவும் அரசியல் யுத்தியாலும் வலுவடைந்து வருகிறது.

ஸ்ரீலங்கா அரசாங்கம் இந்த யுத்திகளால் தோல்விகளை கண்டுள்ளது வன்னியிலும் தற்போது மணலாற்றிலும் இராணுவத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த 1½ மாதங்களில்கூட 250க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அவயவங்களை இழந்துள்ளனர்.

சுமார் 3000 இராணுவத்தினர் பதவியில் இருந்து விலகி ஓடியுள்ளனர் பல நவீனரக

...06 ஆம் பக்கம் பார்க்க

## மும்முனைத்தாக்குதல் மத்தியிலும் மணலாறில் புலிகள் சமர்

மணலாறில் தொடர்ந்தும் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கடலில் இருந்தும், விமானத்திலிருந்தும் தொடர்ந்து குண்டுவீச்சுக்கள் இடம்பெறுகின்றன. கொக்குளாய் இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல் தொடர்ந்தது.

எனினும் இராணுவத்தினர் புலிகளின் கடுமையான தாக்குதலை சமாளிக்க முடியாது திணறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

நேற்று நடைபெற்றமோதலில் மூன்று படையினர் மிதிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்தனர்.

இதனிடையே நேற்றுத் தொடர்ந்த மோதலில் ஆண்டாள் (யோகேஸ்வரி கந்தையா வவுனியா) வீரச்சாவு எய்தினார். 7

## கொக்கட்டிச்சோலையில் புலிகள் ராணுவம் மோதல்

நேற்று முன்தினம் கொக்கட்டிச்சோலை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய படையினர் மீது புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர்.

சுமார் 300 படையினர் ஒபரேஷன் ரேசர் நடவடிக்கையை மேற்கொண்டபோதே இம்மோதல் இடம்பெற்றது.

படையினருக்கு உதவியாக ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதல் நடத்திய போதிலும் படையினர் இழப்புகளுடன் பின்வாங்கினர்.

இம்மோதலில் புலிகள் தரப்பில் கப்டன் சேது (சி. இரவிச்சந்திரன் சோயில், போரதீவு) லெப. தீபன் (சு. சுதாகரன் ஆண்டான்வெளி), 2 ஆம் லெப, விதுரன் (க, ஜீவா லுணுகல எகிடேட்) ஆகிய போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

## ஊரியான் பகுதியை நோக்கி கட்டைக்காட்டிலிருந்து ஷெல்

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு இராணுவ முகாமிலிருந்து படையினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஊரியான் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

மூன்று ஷெல்கள் அப்பகுதி வெளிகளில் விழ்ந்து வெடித்தன

பலாலி இராணுவ முகாமிலிருந்தும் நேற்று முன்தினமிரவு கட்டுவன் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலையும் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டதாகத் தெரிவிக்கபடுகிறது.

பூநகரி - கல்முனைப் பகுதி முகாம் படையினரும் நேற்று அதிகாலை வேளையில் துப்பாக்கிப் பிரயோகத்தையும் மேற்கொண்டுள்ளனர்.47.7

## முல்லைத்தீவில் குண்டு வீச்சு குடும்பப் பெண் உடல்சிதறிப் பலி

முல்லைத்தீவு தண்ணீரூற்று முள்ளியவளைப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களை நோக்கி பொம்மர்கள் நேற்றுக்காலை 9 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டதில் ஒரு பெண் உடல சிதறிப்பலியானார் மற்றும் இவரது கணவன் ஒரு மாணவி ஆகியோர் பலத்த காயங்களுக்குள்ளாகினர்

இப்பகுதியில இரண்டுபொம்மர்கள் 4 குண்டுகளை வீசியதில ஒரு குண்டு இறந்தவரின் வீட்டில வீழ்ந்து வெடித்ததில திருமலையிலிருந்து இடம்பெயர்ந்து தண்ணீரூற்றில வசித்துவருபவரான திருமதி சுமதி சௌந்தரராசா (26) மரணமானார்

இவரது கணவரான கந்தசாமி சௌந்தரராசா (28) தண்ணீரூற்று வித்தியானந்தா பாடசாலை மாணவி செல்வி சுபாசினி மாணிக்கவாசகர் (16) காயமடைந்தனர் 07

## உணவு விடுதியில் குண்டு வெடிப்பு மூன்று பேர் பலி; 15 பேர் காயம்

மட்டக்களப்பில் முஸ்லிம் உணவு விடுதி ஒன்றில் நேற்று காலை குண்டுவெடித்ததில் மூன்று பேர் பலியாகினர், 15 பேர் காயமடைந்தனர்: பலியானவர்களில் ஒருவர் முஸ்லிம் இருவர் சிங்களவர்கள்.

நேற்று முன்தினங் காத்தான் குடியில் தமிழ் மக்கள் பயணம் செய்த பஸ் வண்டி மீது முஸ்லிம் ஊர்காவற் படையினர் கைக்குண்டு வீசி மூவரைக் கொன்றமைக்கு பழிவாங்கவே நேற்று இக்குண்டு வெடிப்பு நிகழ்ந்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

எனினும் இது ஓர் இனமோதலை உருவாக்கவே திட்டமிட்டு நடத்தப்படுவதாக அவ்வூர் வாசிகளை மேற்கோள்காட்டி பி. பி, ஸி. தெரிவித்தது.

## ஹமில்டன்வனசிங்கவும் மணலாறு விரைந்தார்

மணலாறுக்கு கூட்டுப் படைத்தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவும் விரைந்துள்ளதாக பி. பி. ஸி தெரிவித்தது

ஏற்கனவே மணலாறுக்கு இராணுவதளபதி சிசில் வைத்தியரத்ன, வடபகுதி தளபதி டென்சில் கொப்பேகடுவ ஆகியோரும் மணலாறு சென்றுள்ளது தெரிந்ததே.

## ★ தடாசட்டத்திற்கு எதிராக தி. மு. க இளைஞர் அணி உண்ணாவிரதப் போராட்டம்

எதிர்வரும் திங்கள் 23 ஆம் திகதி தமிழக மாவட்ட தலைநகரில் தி மு. க இளைஞர் அணி உண்ணாவிரதம் இருக்க போவதாக தெரிவிக்கப் படுகிறது.

தடா சட்டத்தில் கைதானவர்களை விடுவிக்கக்கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை தி. மு. க ஏற்பாடு செய்துள்ளது.

## ★ சட்டப்பேரவையில் ஜெயலலிதா புலிகளின் தற்கொலைப்படை தம்மைக்கொல்ல வந்துள்ளதாம்!

தம்மைக் கொலை செய்யவும் ராஜீவ் கொலை குறித்து விசாரணை நடத்திவரும் விசேட புலனாய்வுக்குழுவின் தலைமையலுவலகமான மல்லிகையின் கட்டடங்களை தகர்க்கவும் புலிகளின் தற்கொலை படைப்பிரிவு ஒன்று தமிழ் நாட்டிற்குள் புகுந்துள்ளதாக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தெரிவித்தார்

சட்டப்பேரவையில் உரையாற்றிய அவர், புலிகளின் தற்கொலைப்படை தமிழகம் வந்துள்ளதை இந்திய இராணுவமும் தமிழக பொலிசும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்,

இதன்போது குறுக்கிட்ட சட்டப்பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா, ஜெயலலிதா தனிநபர் அல்ல அவர் தமிழ்நாட்டின் பிரதிநிதி அவருக்கு ஒன்று என்றால் நாடு பார்த்திராது என்றார்.

தொடர்ந்து பேசிய ஜெயலலிதா புலிகளை மத்திய அரசு இந்தியாவில் தடை செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டதுடன், தமது உயிர் குறித்து தாம் கவலைப்படவில்லை எனவும் தமிழக மக்களுக்காக தம்மை தியாகம் செய்யத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

...06 ஆம் பக்கம் பார்க்க

# வல்வெட்டித்துறை வழமைக்குத் திரும்பியது

வல்வெட்டித்துறைப் பகுதியில் மீண்டும் வழமை நிலை தோன்றியுள்ளது மக்கள் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. பாடசாலைகள், அலுவலகங்கள் யாவும் இயங்கத் தொடங்கின சந்தைகளும் கூடுகின்றன,

இடம்பெயர்ந்த சில குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். வல்வெட்டித்துறை கடற்பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த கடற்படைப் படகுகள் விலகிச் சென்றுள்ளன.

மீனவர்கள் பகலில் கரையோரப் பகுதிகளில் மீன் பிடிப்பதையும் அவதானிக்க முடிந்தது தற்போது இப்பகுதியில் அமைதி ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த 150 குடும்பங்களுக்கு விடுதலைப் புலிகள் உணவுப் பொருள்கள் வழங்கியுள்ளனர். (08)

# தமிழீழ தாயகப்படம் திறந்து வைக்கப்பட்டது

பாடசாலைகளில் வரையப்பட்டிருக்கும் தமிழீழ தாயகப் படத்தினை திரைநீக்கம் செய்யும் எழுச்சி நாளையிட்டு நேற்று காலை 10 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் தமிழீழ தாயகப் படத்தை வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு அரசண்ணா திரை நீக்கம் செய்து வைத்தார்.

பாடசாலை அதிபர் திரு. எம். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

மற்றும் இவ்வைபவத்தில் உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. என். அனந்தராஜ், வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி கோட்டப் பொறுப்பாளர், மற்றும் ஆசிரியர்கள். மாணவர்கள் பலரும் கலந்து கொண்டு உரையாற்றினார்கள், 08

# உலகக் கிண்ண கிரிக்கெட்; 'முரசொலி' வினாவிடை போட்டி

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர்பாக வாசகர்களுக்கான போட்டியொன்றை நடத்த முரசொலி முன்வந்துள்ளது.

கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்களும் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

போட்டிக்கான வினாக்கள் இவைதான்:—

(1) ஐந்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முதலாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(2) இரண்டாவது இடத்தைப் பெறப்போகும் நாடு எது?

(3) இத்தொடரில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(4) இறுதிப் போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசைப் பெறப்போவது யார்?

(5, முதலாவது உலகக் கிண்ணப் போட்டி

(அ) எங்கு நடைபெற்றது?

(ஆ) எப்பொழுது நடைபெற்றது?

* இம்போட்டியில் முரசொலியில் கடமையாற்றுபவர்களைத் தவிர்ந்த எவரும் பங்குபற்றலாம்
* விடைகள் யாவும் முரசொலியில் பிரசுரமாகும் படிவங்களிலேயே அனுப்பப்படவேண்டும்,
* ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் கீழ்வரும் படிவத்தில் மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு:- | ரூபா. | 250 |
| இரண்டாம் ,, | ,, | 150 |
| மூன்றாம் ,, | ,, | 100 |

விடைகள் இம்மாதம் 23 ஆம் திகதிக்கு பிந்தாமல் முரசொலிக்கு நேர்முகமாகவோ அல்லது தபால் மூலமோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும் கடித உறையில் ''உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி'' எனக் குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:- சரியான விடைகள் பல கிடைக்குமிடத்து குலுக்கல் முறையில் பரிசில்கள் தீர்மானிக்கப்படும்.

## உலகக் கிண்ண கிரிக்கெட் முரசொலி வினாவிடைப் போட்டி

பெயர்: ..........................................................

முகவரி: ..........................................................

..........................................................

மாணவராயின்
பாடசாலையின் பெயர்: ......................................

விளையாட்டுக் கழக அங்கத்தவராயின்
கழகப் பெயர்; ..........................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

# 'புரட்சித் தலைவி' எனச்சொன்னது பற்றி ராமதாஸ் வருத்தம்

உங்களது இல்லத் திருமணத்திற்குத் தமிழக முதல்வர் வந்திருந்தபோது நீங்கள் அவரைப் 'புரட்சித் தலைவி' என்று கூறியதற்கு உங்களது தொண்டர்கள் குழப்பமும், கோபமும் அடைந்திருக்கிறார்கள் என்பது தெரியுமா?" என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸை நிருபர்கள் கேட்டபோது;

'ஒரு விருந்தாளியை வரவேற்கும் மனநிலையில் வெளிப்பட்ட வார்த்தை அது' பின்னர் தான் ஏன் இப்படிச் சொன்னோம்' என்று கூட நினைத்தேன்' என அவர் வருத்தம் தெரிவித்தார்

மேற்படி பேட்டியின் ஏனைய பகுதி இங்கு தரப்படுகின்றது.

கேள்வி:- எல்லா அரசியல் கட்சிகளின் நடைமுறைக் கலாசாரப் பாதிப்புகள் உங்கள் கட்சிக்கும் வந்துவிட்டது போல் தெரியுதே?

பதில் ;- நோ... நோ எங்களது பாட்டாளி மக்கள் கட்சி வித்தியாசமான ஒரு கட்சி நாங்கள் சம்பிரதாயங்களை ஏற்பதில்லை, குறுகிய காலத்தில் துவக்கப்பட்ட கட்சியாக இருந்தாலும் மக்கள் பிரச்சினைகள் பலவற்றுக்காகப் போராடி வெற்றியும் கண்டிருக்கிறோம், மற்ற கட்சிகளைப்போல மக்களை ஏமாற்றியதில்லை, கருணாநிதி, எம், ஜி- ஆர்-, ஜெயலலிதா என எல்லோருமே இந்த ஏமாற்றும் பாதையில் தான் நடந்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள் ஆனால் நாங்கள் அப்படியல்ல,

கேள்வி:- பாட்டாளி மக்கள் கட்சி ஆரம்பித்த புதில் ஏராளமான ஆதரவு தென்பட்டது இப்போது அப்படித் தெரியவில்லையே?

பதில்:- வளர்ச்சி இல்லை என்று சொல்வது தவறு, வெற்றி பெறாத எல்லாக் கட்சிகளிடமும் காணப்படும் தொய்வு எங்களையும் தொற்றி இருக்கலாம், ஆனால் இப்போது அந்த நிலை இல்லை,'

கேள்வி:- மத்திய-மாநில அரசுகள் தனியார் கல்வி நிலையங்களை ஊக்குவிக்கும் கொள்கை நிலையில் இருக்கும் இந்தத் தருணத்தில் நீங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசுடைமை ஆக்கக் கோரிக்கை விடுப்பது சரியா? அதற்கு அரசின் நிதிநிலை இடம் தருமா?

பதில்:- தமிழ் நாட்டில் 72 பாலிடெக்னிக்குகள், 52 எஞ்ஜினியரிங் கல்லூரிகள் தனியார்வசமிருந்து கொள்ளையடிக்கின்றன, அதைப்போலவே அண்ணாமலைப் பல்கலைக் கழகமும்... இவை எல்லாவற்றையுமே அரசுடைமை ஆக்கவேண்டும் என்பதே எங்களது கோரிக்கை, தமிழகத்தில் தனியார் எஞ்ஜினியரிங் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் பேராசிரியர்களாக வேலை செய்பவர்களுக்கு 750 ரூபா தான் சம்பளம் கொடுக்கிறார்கள். இது சரியா? இப்படிப்பட்ட தவறுகளை நாம் எப்படி அனுமதிப்பது?

## பாகிஸ்தானில் சுட்டுக் கொலை

பாகிஸ்தானில் வைத்து இலங்கைத் தமிழர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது:

கொள்ளையர்களின் வேட்டுக்கே இவர் இரையானதாகவும் அறியவந்துள்ளது:


## சிறு விளம்பரம்

தேவை

கணக்காய்வு நிறுவனம் ஒன்றிற்கு Peon தேவை 23 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது A. S S (J) Ltd. 140, பலாலி வீதி, திருநெல்வேலி. 03043

வலி-வடக்கு ஓய்வூதியர் நலன் புரிச் சங்கம் நடாத்தும் இலவச ஆங்கில இலக்கண பேச்சுப் பயிற்சி வகுப்பு

(GRAMMAR & SPOKEN ENGLISH COURSE)

★ தேர்ச்சியும் அநுபவமும் பெற்ற ஆங்கில ஆசிரியர்களால் இச்சேவை வழங்கப்படும்.

★ வலி- வடக்கில் வாழ் (தற்போது இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்போரும்) 16- 30 வயதெல்லைக்குட்பட்ட இருபாலாரும் சேர்ந்துகொள்ளலாம்.

★ 6 மாதத்தைக் கொண்ட இப்பயிற்சி நெறி தமிழ்ப் புத்தாண்டுடன் ஆரம்பமாகும்

★ வகுப்பு ஆரம்பமாகும் தினத்தன்று பிரவேசப்பணமாக ரூபா 25/- செலுத்தவேண்டும்

★ இவ் வகுப்பிற் சேர விரும்புவோர் 1992- 03- 31 திகதிக்கு முன் (முழுப்பெயர், பால், பிறந்ததிகதி, முகவரி, கல்வித்தகைமை தொழில், பெற்றோர் இச்சங்க அங்கத்தவராகில் அவ்விவரம்] ஆகியன அடங்கிய தம் விண்ணப்பங்களைக் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பவும் பணிமனைத் தபாற்பெட்டியிலும் போடலாம்,

உதவிச்செயலாளர்,
வலிவடக்கு ஓய்வூதியர் நலன்புரிச்சங்கப் பணிமனை
காசிப்பிள்ளையார் கோவிலடி
03041 தொல்லிப்பழை

# அறிவித்தல்

## உற்றார், உறவினர், நண்பர்களுக்கான வடபகுதி தனியார் உணவுவிநியோகம்

உங்கள் உற்றார், உறவினர் நண்பர்கள் கொழும்பிலிருந்து உங்களுக்காக எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் திட்டமிட்டபடி லொறிகள் மூலம் கொழும்பிலிருந்து செஞ்சிலுவைச் சங்கமூலம் அனுப்ப முடியாமல் போனதால், கடந்த 31. 12 91ல் கப்பல் 'MV PHAROSCE' மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது, ஆனால் எதிர்பாராத விதமாக மேற்படி பொருட்கள் காங்கேசன் துறையில் இறக்கிவைக்கப்பட்டது இதனால் நாம் மிகப் பெரிய சிக்கலில் தள்ளப்பட்டோம்.

பின் எமது பாரிய பிரயத்தனத்தின் பேரில் மொத்தம் 125 மெ/தொன் பொருட்களில் 50 மெ/தொன்னிற்கு மேல் பொருட்கள் சோர்வுடன், காங்கேசன் துறையிலிருந்து 'MV MIRINALCE' என்னும் கப்பலில் ஏற்றப்பட்டு பருத்தித்துறையில் இறக்கப்பட்டு இப்போ எம்மிடம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது, இந்த வேளையில் மக்களின் விநியோகத்திற்காக வந்த பொருட்களில் காங்கேசன்துறையில் ஏற்பட்ட பொருள் குறைவு தொடர்பாக எமது தலைமைக் காரியாலயமும், இந்த விநியோகத்துடன் தொடர்புடைய முக்கியஸ்தர்களும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளார்கள்.

எது எவ்வாறாயினும், ஏற்பட்ட பொருள் சோர்வை நிவர்த்தி செய்து விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக எமக்கு அறிவித்தல் கிடைத்துள்ளது.

ஆகவே இருப்பதைக் கொண்டு முதலில் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

ஒவ்வொரு உ. அ. அதிபர் பிரிவு ரீதியாகவும் ஒருமையத்தில் விநியோகிக்க உள்ளதால் விநியோக திகதிகளை சில தினங்களில் பத்திரிகை விளம்பரங்களில் தயவு செய்து கவனிக்கவும், தயவு செய்து வெற்றுகலங்களும், வெற்று உறைகளுடனும் அடையாள அட்டை அல்லது உத்தியோக பூர்வமான அத்தாட்சியுடனும் வரவும் மேலும், கடிதங்கள் சகலருக்கும் அனுப்பப்பட்டுள்ளது, முகவரி மாறியவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் தயவு செய்து தங்கள் தங்கள் தபாலகங்களில் தொடர்பு கொள்ளவும்,

"AIKAYES"
JAFFNA.

03042

# ஆப்கான் விவகாரம்; ஐ. நா. தூதுவர் ஜனாதிபதி சந்திப்பு

ஆப்கானிஸ்தானில் இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற ஐக்கிய நாடுகள் சபையின் யோசனைக்கு ஆதரவாகத் தான் பதவி விலகுவதற்கு ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி நஜிபுல்லா நிபந்தனையுடன் முன்வந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

ஐ. நா. தலையீட்டில் அங்கு யுத்த நிறுத்தம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் தேர்தல் நடத்தப்படவுள்ளதாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஐ. நா. விசேட தூதுவருடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே தனது ராஜினாமா முடிவு பற்றி அறிவித்தார்.

ஐ. நா. விசேட தூதுவர் ஐந்து நாள்களாக காபூலில் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஆயினும் எல்லா ஆப்கான் தரப்புகளும் இடைக்கால அரசு அமைக்கும் யோசனைக்கு உட்பட்டாலே தான் ராஜினாமாச் செய்யத் தயாராக உள்ளதாக நஜிபுல்லா ஐ. நா. விசேட தூதுவரிடம் கூறியதாகச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இடைக்கால அரசு ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடாக ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் வியன்னாவில் அல்லது ஜெனீவாவில் ஐ. நா. சபை கூட்டும் மாநாட்டில் தானும் கலந்துகொள்ள வேண்டுமென வலியுறுத்த வேண்டாம் என ஜனாதிபதி நஜிபுல்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் சேர்ந்த 150 பேர் இந்த உத்தேச மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இடைக்கால அரசு ஆப்கானிஸ்தான் மக்களின் பாதுகாப்பையும், இறைமையையும், ஐக்கியத்தையும் பேணும் அதிகாரங்களைக் கொண்டிருக்கவேண்டும் என்று நஜிபுல்லா தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ. நா.வின் சமாதானத் திட்டத்தைத் தீவிரவாதக் கிளர்ச்சிக் குழுக்கள் ஏற்கனவே நிராகரித்துள்ளன.

தமக்கு அதிகாரம் கிடைப்பதற்கான வாய்ப்பை இல்லாமற் செய்யும் சர்வதேசச் சூழ்ச்சியே இதுவென அவை கூறியுள்ளன.

சில தினங்களுக்கு முன் கிளர்ச்சியாளர்கள் காபூல் நோக்கி றொக்கெட் தாக்குதல் நடத்தியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சென்ஜோன்ஸ் - சென்றல்

# இன்றும் நாளையும் 88 ஆவது மாபெரும் கிரிக்கெற் போட்டி

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 'பிக்மாச்' (BIG MATCH) என்றழைக்கப்படும் 88 ஆவது கிரிக்கெற் போட்டி இன்றும் நாளையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

இவ்வருடத்தில் இதுவரை இரு அணிகளும் கலந்துகொண்ட போட்டிகளின் பெறுபேறுகளை உற்றுநோக்கும் பொழுது இவ்வாட்டத்தில் கடும் போட்டி நிலவும் என்று கிரிக்கெட் அவதானிகள் கருதுகிறார்கள்.

சென்ஜோன்ஸ் பங்குபற்றிய ஆறு போட்டிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ள போதிலும் அவர்கள் வெகு திறம்பட ஆடியுள்ளார்கள் என்பதை அவதானிக்கக்கூடியதாய் உள்ளது. அணித்தலைவன் மகாலிங்கம் காண்டீபன் 6 போட்டிகளில் 3 போட்டிகளில் சதம் போட்டுள்ளார் என்பதும், அதில் ஒன்றான யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிரான போட்டியில் அவர் பெற்ற 151 ஓட்டங்கள் ஒரு புதிய சாதனை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் மத்திய கல்லூரி பங்குபற்றிய எட்டுப் போட்டிகளில் 2இல் வெற்றி பெற்றுள்ளனர். 6 போட்டிகள் நேரம் போதாமையால் வெற்றி தோல்வியின்றி முடிந்திருந்த போதிலும் அவர்கள் இப்போட்டிகளில் மெச்சத்தக்க விதத்தில் ஓட்டங்களை குவித்தும் இலக்குகளை வீழ்த்தியும் உள்ளார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

சென்ஜோன்ஸ் அணி:- எம். காண்டீபன் தலைவர், பி. ரி. ஜெறிசன் உபதலைவர், ஏ. யோகதாஸ், எஸ். பகீஸ்குமார், சுகிதகுமார், எம். துஸகரா, யே. ஜீ பார்த்தீபன், ஜே. எக்ஸ். மதியாவல், சன்ஜீவ் பிரதீபன், சிறீதரன், கம்ஸறூபன் கிருபன், சிவரூபன், ராஜசேகரன், பயிற்றுனர் கே. எஸ். பரமலிங்கம், கிரிக்கெற்றுக்குப் பொறுப்பான ஆசிரியர் எ. பி. புறுடி, விளையாட்டுத்துறை ஆசிரியர் ஜே. அமலசீலன்.

யாழ் மத்திய கல்லூரி அணி: கே. பிரபாகரன் தலைவர், ஈ. றகுதாஸ், உபதலைவர், என். சுரேஷ், எஸ். ஏசாஸ், எஸ். மணிவதனன், என். முகுந்தன், ஆர். முரளி ஜீ. கஜேன்டிர குமார், பீ. றமேஸ், எஸ். கமல்றாஜ், எம். குமரேசன், கே. சுரேஷ், யே. கினேசதன், எஸ். லக்சுமிதரன், கே. கஜேண்டிற குமார், ரீ. சதீஸ்குமார் பயிற்றுனர்:- சி. என். மதிவதனன் கிரிக்கெற் ஆசிரியர் வி. கையிலைநாதன் விளையாட்டுத்துறை ஆசிரியர் வி. ஐயாத்துரை.

கப்டன்
டி. ஏ. எம். குணசிங்கம்

## திரும்ப விரும்பாத அகதிகளை

# 'படம் காட்டி' மனம்மாற்ற இந்திய அரசு முயற்சிக்கும்

ஸ்ரீலங்கா அரசபடைகளின் கெடுபிடிகள், தாக்குதல்கள் நீடிப்பதால் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவிக்காது தொடர்ந்தும் தமிழகத்திலுள்ள முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளைக் 'கவரவும், மனம் மாற்றவும்' அரசாங்கம் புதிய திட்டம் ஒன்றினைக் கைக்கொள்ள எண்ணியிருப்பதாக அறிய வந்துள்ளது.

முகாம்களில் உள்ள அகதிகளைத் தாயகம் திரும்ப ஊக்குவிக்கும் நடவடிக்கையாக ஏற்கனவே திரும்பிய அகதிகள் மகிழ்ச்சியாக (?) இருக்கிறார்கள் என்பதைக் காட்டும் வீடியோப்படம் முகாம்களில் விரைவில் காட்டப்படவுள்ளதாக அகதிகள் மறுவாழ்வுக்கான ஒருங்கிணைப்பாளர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனை இந்தியத் தூதரகம் தயாரித்துத் தமிழக அரசின் ஒப்புதலுக்கென அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## உடுவிலில் கும்பாபிஷேகம்

உடுவில் அருள்மிகு ஸ்ரீ காளி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

மண்டலாபிஷேகம் பதினைந்து நாள்களுக்கு நடைபெறும். (50)

## பொதுக் கூட்டம்

ஏழாலை பெரிய தம்பிரான் கோவில் பரிபாலன சபை பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் சாடியடி முன்றலில் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

# தவக்கால நற்சிந்தனை



"சின்னஞ்சிறிய என் சகோதரர்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்பது இயேசுக்கிறிஸ்து அருளிய திருவாக்கு.

ஆனால் நாளாந்த வாழ்வில் இவ்வார்த்தைகளின் அர்த்தங்களை உணராமலோ அன்றேல் உணர விரும்பாமலோ நாம் வாழத் தலைப்படுகின்றோம்.

ஆயிரக்கணக்கில் வாரியிறைத்து ஆலயங்களை அலங்கரிப்பதிலும், அடியவர்களென எம்மை பிரசித்தப்படுத்த அன்னதானம் வழங்குவதிலும் நாம் போட்டியிடுகின்றோம்.

ஆனால் அல்லற்படும் எம் அயலாருக்கு அள்ளிக்கொடுக்கவோ, அவர்களை அரவணைக்கவோ மறுக்கிறோம். இத்தகைய வாழ்வு அர்த்தமற்றது - கிறிஸ்தவ விழுமியங்களைக் குழிதோண்டிப் புதைப்பது.

எனவே அல்லற்படுவோருக்கும், வேதனையில் வாடுவோருக்கும் உதவிக்கரம் கொடுப்போம் - வாழவைப்போம் - இத்தவக்காலத்தில் மனமாற்றம் பெறுவோம். "ஏழையின் புன்சிரிப்பு - இறைவனின் மனநிறைவு" இதை மனதில் கொண்டு செயற்படுவோம்.

★ எப். எக்ஸ். அன்ரன்

★ முன்னோக்கிப் பார்க்கிறேன் ...

# முன்னோக்கிச் செல்ல உதவிய அந்த வீரப் பெண்

1986ஆம் ஆண்டு! ஒருநாள்!

அப்போது குரும்பசிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாமொன்று இருந்தது. பாச மண்ணெங்கும் பகைவரின் கொலைக் கரங்கள் படர்ந்திருந்த நேரமது.

யாழ் மாவட்டத் தளபதியாக அப்போது இருந்தவர் கிட்டு அண்ணா!

அவர் முகாமில் அப்போது நானும் ஒருவன்.

வாக்கிடோக்கி அலறுகிறது!

"ஆமி வெளிக்கிட்டுவிட்டான்"...

'உடனே வெளிக்கிடுங்கோ"... கிட்டண்ணாவின் குரல் கோட்டை இடியாக அதிர்கிறது.

அடுத்த நிமிடம்,

வாசலில் வாகனமொன்று உறுமியபடி வந்து நிற்கிறது.

குப்பு சாரதியின் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான் ஒரே நிமிடம்தான்! எல்லோரும் கையில் கிடைத்த ஆயுதங்களை அவசரம் அவசரமாக எடுத்துக்கொண்டு புறப்படுகிறோம்?" வாகனம் வளைந்து வளைந்து வேகமாகப் பறக்கிறது.

தெல்லிப்பழைச் சந்தியைத் தாண்டிவிட்டோம் வாகனத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவாறு பையன்கள் அங்குமிங்குமாக 'சடுகுடு' விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

500 மீற்றர் தூரம் குரும்பசிட்டிப் பாதையில் ஓடியிருப்போம் அதற்குள் ..

உலங்கு வானூர்தியொன்று எம்மைப் பார்க்கிறது.

கழுகுப் பார்வைதான்!

மறு நிமிடம்!

வட்டமடித்துவந்த வானூர்தி "பட்" "பட்" டென்று குண்டுகளைக் கொட்டுகிறது நட்ட நடுவீதியில் வாகனம் ஓடியவாறு அரசமரமொன்றின் அருகே நிற்கிறது. அதற்குள் வேறு இரு உலங்கு வானூர்திகளும் அவ்விடம் வந்துவிடுகின்றன.

எம்மருகே சன்னங்கள் வர்ண ஜாலங்கள் காட்டி, சன்னங்களருகே ஊர்ந்து விரைந்து செல்கின்றன.

"ஜோய்" என்றவனின் காலில் ஒரு சன்னம் பதம் பார்க்கிறது.

அப்போது எமது துப்பாக்கிகளும் வானத்தை நோக்கி முழங்குகின்றன. போராளிகள் ஒவ்வொருவரும் நிலையெடுத்துச் சுடுகிறார்கள்...

ஒரு இளம் போராளி குண்டுபட்டு விழுகிறான்... அவன் வயிற்றில் இருந்து இரத்தம் பீறிடுகிறது. அவனைச் சுற்றிவர மேலும், மேலும் சன்னங்கள்... என் கையில் இருந்த வாகன எதிர்ப்புச் சுடுகலனை அருகிலிருந்த (மாவீரன்) காடன் சாளியிடம் கொடுத்துவிட்டு காயப்பட்ட அச்சிறுவனை நோக்கி ஓடுகிறேன்.

"கவனம் ... கவனம் றவுண்ஸ் வந்துகொண்டிருக்கு"— குப்பு கத்துகிறான் அவனைத் தூக்கி என் தோளில் போட்டுக்கொண்டு நடக்கிறேன். என் பக்கமெங்கும் சன்னங்கள் துள்ளி விளையாடுகின்றன.

10 யார் போயிருப்பேன்!

உலங்கு வானூர்தியில் இருந்து "றொக்கற் மோட்டார்" அடிக்கத் தொடங்கினார்கள். எனக்கு 5 அடி தூரத்தில் ஒரு "றொக்கற்" வந்து வெடிக்கிறது நான் கண்ணை மூடிக்கொண்டு பனைமரமொன்றின் மறைவில் நிலையெடுக்கிறேன். மீண்டும் ஒரு சோகம்! வயிற்றில் காயப்பட்ட அதே சிறுவனுக்கு முதுகில் ஷெல் துண்டு பாய்கிறது. அப்போது ஒரு இளம் பெண் எம்மை நோக்கி ஓடி வருகிறாள்... என் தோளில் இருந்த சிறுவனைத் தானும் சேர்ந்து தூக்குகிறாள்.. அவளின் உதவியால் அந்தப் போராளி அன்று உயிர் பிழைத்தான்.

புறநானூற்று நூலில் காணும் வீரத் தமிழ்ப் பெண்களை என் மனம் நினைக்கிறது.

அன்று அந்த பெண் அத்தனை பயங்கரமான தாக்குதல்களுக்கு மத்தியிலும் எவ்வாறு நின்வந்து உதவி செய்தாள்? எமது சமுதாயத்தில் இது போன்ற பெண்கள் இருந்துவிட்டால்?...வெற்றி அதி தூரம் இல்லை

□ கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

# எயர்லங்கா குறித்து சபையில் விவாதம்

எயர்லங்கா விமானங்கள் வாங்குவதற்கு செலவிடும் பணத்தை மக்களின் தேவைக்குப் பயன்படுத்தலாம் என்று சுதந்திரக்கட்சி டி. எம். தயாரத்தினா நேற்று முன்தினம் சபையில் கூறினார்.

ஒரு சிறிய நாட்டுக்கு பல விமானங்கள் தேவைதானா? என்றார் சுதந்திரக் கட்சி எம். பியான குணரத்தினா.

விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரமானியம் குறைக்கப்பட்டுள்ளது. ஜனசவிக்கு 2500 ரூபா கொடுப்பதாகக் கூறி தற்போது 1450 ரூபாவுக்கான பொருள்களே வழங்கப்படுகின்றன என்றார் சுதந்திரக்கட்சி எம். பியான ரணதுங்கா.

# சர்வதேச நாணயநிதியம்

# இந்திய நாட்டின் அனுபவம்

ராஜீவ்காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையும் பலனளிக்கவில்லை. வெளிநாட்டுக் கடன் கணக்கும் குறையவில்லை 1991இல் இந்தியாவின் வெளிநாட்டுக் கடன் 1,9 000 கோடி ரூபா இதை அடைக்க இப்போது ஐ எம் எஃப்-பில் கடன்பெறப்படுகிறது.

## விமர்சனக் கண்ணோட்டம்

ஒரு பேட்டி அளித்திருக்கிறார் மத்திய வர்த்தக இணை அமைச்சர் ப சிதம்பரம்: 'எங்ளிடம்தான் கடன் வாங்க வேண்டும் என்று ஐ.எம் எஃப் நம்மை நிர்ப்பந்திக்கவில்லை, நாமாகவேதான் வலியச் சென்று கடன் கேட்கிறோம். இதில் என்ன தவறு?' என்று சிதம்பரம் கேட்கிறார்.

இந்தியாவும் சேர்ந்து ஆரம்பித்ததுதான் ஐ.எம் எஃப என்று சிதம்பரம் பெருமைப் பட்டுக் கொள்வதில் அர்த்தமில்லை அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஐரோப்பா போன்ற நாடுகளின் ஆதிக்கமே ஐ-எம். எஃப்-பில் இருக்கிறது. இந்த வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்படும் பொருளாதார நெருக்கடியை இந்தியா போன்ற வளர்முக நாடுகளின் மீது சுமத்த ஏற்பட்டதுதான் ஐ. எம். எஃப் கடன் பெற்ற நாட்டின் குரல்வளையை அது தனது நாசகாரமான திட்டத்தின் மூலம் நெரிக்கும், மேலும் எந்தவொரு ஏழைநாட்டின் முன்னேற்றத்துக்காவும் அது அமைக்கப்படவில்லை, வட்டிக்கடைக்காரர்கள் ஏழைகளின் முன்னேற்றத்துக்காகவா கடை வைத்திருக்கிறார்கள்?

உண்மையிலே ஏழை நாடுகளுக்கு உதவத்தான் ஐ. எம். எஃப், மற்றும் உலக வங்கி போன்றவை ஏற்படுத்தப்பட்டன என்றால் அவற்றிடம் கடன்பட்ட ஏழை நாடுகளின் கடன்சுமை ஒவ்வோர் ஆண்டும் அதிகரிப்பது ஏன்...? கடன் தேவையா... தருகிறேன் ஆனால் உன் நாட்டின் பணமதிப்பை குறை' என்று அவை வலியுறுத்துவது ஏன் ? விலைவாசியை உயர்த்தச் சொல்வது ஏன்...? கடன் பெற்றவன் பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை... வட்டியும் முதலுமாகத் திருப்பித்தரவேண்டும்' என்று மென்னியைப் பிடிப்பதுதான் கடன் கொடுத்தவனின் 'லாஜிக்'! இதைத்தான் சரியென்று நியாயப்படுத்துகிறாரா அமைச்சர் சிதம்பரம்...? கடன் கொடுப்பவனின் நிபந்தனையை அரசு ஏற்பதால் பொதுமக்களின் மீது எவ்வளவு பெரிய தண்டனை சுமத்தப்படுகிறது தெரியுமா...?

உதாரணமாக 1980 ஆம் ஆண்டு ஐ. எம் எஃப்-பிக் மூன்று பிலலியின் (ஒரு பிலியன் —நூறுகோடி) டாலர் கடன் வாங்கினோம். வாங்கிய கடனில் பெரும் தொகை ஏர்பஸ் ஏ-320 வாங்கச் செலவிடப்பட்டது. அப்படி முத்தாறு ஏர்பஸ (சொகுசு விமானம்) வாங்க ஆடர் கொடுக்கப்பட்டது, அவ்வளவும் நஷ்டம் இந்தக் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டத்தை ஏர் பஸஸில் பயணம் செய்யும் வசதி படைத்த பத்துப் பதினைந்து சதவிகிதம் பேரா தாங்கிக் கொண்டார்கள்...? இல்லை... இந்த ஏர்பஸ் வானத்தில் பறக்கும்போது அண்ணாந்து பார்த்து சாவதற்குள் ஒரு தரம் ஏறிப பயணம் செய்யமாட்டோமா...' என ஏங்கும் எண்பத்தைந்து சதவிகிதம் மக்கள்தான் இந்தக் கடன் சுமையைத் தாங்கிக் கொண்டார்கள். அந்தத் தொகையைக் கடன்பெற்ற பிறகு. பொருளாதாரத்தில் தாராள வாதம் பேசத்தொடங்கிய மத்திய அரசு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிப்பதற்கும் சலவை இயந்திரங்கள் தயாரிப்பதற்கும் வி. சி. ஆர். கம்பியூட்டர் தயாரிப்பதற்கும் ஊக்கம் அளித்தது. இதையெல்லாம் நமது நாட்டில் அதிகபட்சம் பதினைந்து சதவிகிதம் பேர் பயன்படுத்துகிறார்கள், ஆனால் இவற்றால் ஏற்பட்ட கடனை இவற்றைப் பயன்படுத்தாத எண்பத்தைந்து சதவிகிதம் பேர் சுமக்கிறார்கள். அதுதான் கொடுமை உலகவங்கி ஐ. எம். எஃப் போன்ற அமைப்புகளிடம் கடன் வாங்கிய நாடுகளின் கதி, அதோகதிதான்.

பிரேசில் நாட்டின் இரும்புத்தாது வளம் செழிப்பான வனவளம், நீர் வளம் ஆகியவற்றை அபகரிக்க எண்ணிய ஐ எம் எஃப்-பும் மேலைநாடுகளும் கடன் கொடுத்து இந்த வளங்களை மேன் மேலும் மேம்படுத்துமாறு அறிவுரை கூறின. பிரேஸிலும் ஏற்றுக் கொண்டது, பின்னர் என்ன நடந்தது...? மலிவான விலையில் வளமான கச்சாப்பொருள்கள் அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் கிடைத்தன.

பிரேசில் முன்னேற ஐ.எம் எஃப், லோன் கொடுக்கவில்லை, அதன் வளங்களைக் கொள்ளையடிக்கவே லோன் கொடுத்தது. 1980 ஆம் ஆண்டுகளின் மத்தியில் ஐ-எம்-எஃப்-பில் கடன் வாங்கிய ஜாம்பியா இன்னும் தலைநிமிரவே முடியவில்லை. அந்த கடன் சுமை இரண்டாயிரம் கோடி ரூபாய்! மெக்ஸிகோ சிலி ஜமைக்கா அண்டை நாடான ஸ்ரீலங்கா... இன்னும் பலப்பல வளர்முக நாடுகள் ஐ எப்.எஃப்.பின் பிடியில் சிக்கிச் சீரழிந்துள்ளன.

ஐ.எம் எஃப், வளர்முக நாடுகளுக்குக் கடன்கொடுக்கும், கூடவே நிபந்தனை விதிக்கும். உதாரணமாக கடன்பெற்ற ஒன்றின் அமெரிக்க நாடுகளிடம் எண்ணை வித்துக்களைப் பயிரிடக் கூடாது என 'கண்டிஷன், போட்டது. இதை ஏற்றுக் கொண்டதால் லத்தீன் அமெரிக்க நாடுகளில் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்தியாவிடம் 'எண்ணெய் வித்துக்களைப் பயிரிடக் கூடாது நெல் பயிரிடக் கூடாது' என்று ஐ எம் எஃப் நிபந்தனை போடுகிறது! இந்தியா ஒப்புக்கொண்டால் 'நல்லெண்ணெய்க் குளியலுக்குக்கூட அமெரிக்காவையும் ஜப்பானையும் நாம் எதிர்பார்க்க வேண்டும்!

ஐ எம்.எஃப்- நிபந்தனைப்படி கடன் பெற்ற நாடுகள் தங்கள் நாட்டு நாணய மதிப்பைக் குறைந்தன.

இந்தியாவும் குறைந்துள்ளது- ஒரு வேதனையான புள்ளிவிவரம் பார்ப்போமா...?

1950 ஜனவரி 26 இல் குடியரசு நாடானோம்- இப்போது நாற்பத்திரெண்டாவது குடியரசு தினத்தையும் கொண்டாடி விட்டோம்-

இடைப்பட்ட ஆண்டுகளில் வருடத்துக்குச் சுமார் இரண்டு பைசா வீதம் ரூபாய் மதிப்பு குறைந்து 1990 செப்டம்பரில் 1 ரூபாவின் மதிப்பு 6 57 பைசாவாகிவிட்டதே!

1947 ஆம் ஆண்டு நமது மூன்று ரூபாயும் அமெரிக்காவின் ஒரு டாலரும் சமம்-1960 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் 13 ரூபாய் கொடுத்தால் ஒரு குவைத்தினார் வாங்கலாம்- ஆனால், இன்று 26 ரூபாயும் ஒரு டாலரும் சமம் 94 ரூபாயும் ஒரு தினாரும் சமம்! இந்த வீழ்ச்சிக்கு யார் காரணம்..? இதில் காங்கிரஸுக்கும் சம்பந்தம் இல்லையா...?

உலக வங்கி ஐ.எம் எஃப் நிபந்தனைகளை ஏற்ற எல்லா நாடுகளிலும் பணமதிப்புக் குறைக்கப்பட்டது- அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்த்தப்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டம் உயர்ந்தது பணவீக்கம் பெருகியது-

உணவுப்பொருள் மானியம் வெட்டப்பட்டது- சமூக நலப் பணிகளுக்கான அரசின் நிதிஒதுக்கீடு குறைக்கப்பட்டது- அடிப்படைத் தொழில்கள் நசிந்தன- பொதுத்துறை ஒழித்துக் கட்டப்பட்டது, இதே நிலைமையைத்தான் நமது நாடும் இப்போது எதிர்கொண்டுள்ளது- எனவேதான் இ. காங்கிரசின் புதிய பொருளாதாரக் கொள்கை அற்புதங்களை நிகழ்த்தாது என்கிறோம்- 1981, 1991 ஆகிய ஆண்டுகளில் ஐ. எம்- எஃப் பின் உத்தரவுப்படி இந்தியா நடந்து கொண்டால் இந்தியா முன்னேறவில்லை- அதன் பொருளாதாரக் கொள்கை பயனளிக்கவில்லை- இப்போதும் பயனளிக்காது என்கிறோம்-

'இல்லை பலனளிக்கும்' என நரசிம்மராவின் அமைச்சரவை சகாக்கள் கூறுவார்களானால் அவர்களுக்கு ஒரு கேள்வி...

1980 ஆம் ஆண்டு இந்தியாவின் அந்நியக் கடன்சுமை 9,000 கோடி ரூபாய் அதைச் சரிக்கட்ட ஐ எம் எஃப் பில் கடன் வாங்கியது இந்தியா முடிவு? 1985 இல் 25.000 கோடி ரூபாய் கடனாளியாக முன்னேறியது இந்தியா அப்போது ஆட்சியில் இருந்தது காங்கிரஸ் கட்சிதான் ராஜிவ்காந்தியின் புதிய பொருளாதாரக் கொள்கையும் பலனளிக்கவில்லை வெளிநாட்டுக் கடன்சுமை குறையவில்லை 1991 இல் வெளிநாட்டுக் கடன் 1, 90 000 கோடி ரூபாய்! இதை அடைக்க இப்போது ஐ- எம்- எஃப்-பில் கடன் பெறப்படுகிறது-

# வாழப்பாடி - மரகதம் சந்திரசேகர் கோஷ்டிப்பூசலில் 'புதிய திருப்பம்'

ராஜீவ் காந்தி கொலை விவகாரத்தின் பின்னணியில் இந்திரா காங்கிரஸில் மரகதம் சந்திரசேகர் கோஷ்டிக்கும், தமிழக இ.காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கோஷ்டிக்கும் இடையிலான 'வக்கிரம்' வலுப்பட்டு வருவதாகத் தெரிகிறது எனத் தமிழகச் செய்திகள் கூறுகின்றன,

ராஜீவ் கொலை தொடர்பாக வர்மாகமிஷன் முன் குமுதவல்லி என்ற பெண் அளித்த சாட்சியம் பற்றி பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வாழப்பாடி தமிழகக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானவுடன் குமுதவல்லி மாவட்ட மகளிர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அவரது கணவர் தென் செங்கை மாவட்ட காங்கிரஸ் கமிட்டிப் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். இப்போதும் அப்பதவிகளில் இருக்கிறார்கள்,

கடந்த ஆண்டு மே-21 கொலை சம்பவம் பற்றி குமுதவல்லி சாட்சியத்தில் இப்படிச் சொன்னார்; அன்றிரவு 8 30 மணியிருக்கும், பொதுக்கூட்டம் நடந்த இடத்தருகே கும்மிருட்டு ஒரேயொரு டியூப்லைட் எரிந்து கொண்டிருந்தது பத்துப்பதினைந்து பேர் அங்குமிங்குத் நடந்து கொண்டிருந்தார்கள், இந்த மேடைக்கருகிலிருந்த பனை மரத்தடியில் நானும், மகளிர் காங்கிரசைச் சேர்ந்த சில பெண்களும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

பொட்டல் காட்டில் மேடை போட்டிருக்கிறார்களே என்று நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு கார் வந்தது. முன்ஸீட்டிலிருந்து மரகதம் சந்திரசேகரின் மகன் லதா பிரியகுமார் இறங்கினார் பின்ஸீட்டிலிருந்து லதா கண்ணனும், அவரது மகள் கோகிலாவும் இறங்கி வந்தார்கள். அவர்களை விட்டு லதா பிரியகுமார் பிரிந்து வேறு பக்கம் நடந்து போனார், எங்கிருந்தோ இரண்டு பெண்கள் (வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள்) மேடையருகே வந்தனர். நிருபர்கள் பகுதியில் போய் அமர்ந்தனர்.

இதற்கிடையில் மரகதம் சந்திர சேகர் கோஷ்டியைச் சேர்ந்த லோக்கல் காங்கிரஸ் பிரமுகரான கண்ணதாசன் தனக்குக் கொலை மிரட்டல் விடுத்ததாக ஐ. ஜி கார்த்திகேயனிடம் குமுதவல்லி புகார் செய்திருக்கிறார்.

மரகதம் சந்திரசேகரின் 'தத்துப் பிள்ளை'யாகக் கருதப்படும் ஆவடி காங்கிரஸ் பிரமுகரான கண்ணதாசன் 'நீங்கள் குமுதவல்லியைத் தாக்கவும் மிரட்டவும் செய்ததாகக் கூறப்படுகிறதே' எனச் செய்தியாளர்கள் கேட்டபோது, 'ராஜீவ் பிறந்தநாள் அன்று நடந்த கூட்டத்தில் குமுதவல்லி காங்கிரஸ் தலைவர்களைத் தரக் குறைவாக விமர்சித்துக் கட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்திக் கொண்டிருந்தார். 'உன்னால் கட்சிக்குக் கெட்டபெயர் ஏற்படுகிறது' என்று எச்சரிக்கை செய்து அனுப்பினேன். தாக்கவோ, மிரட்டவோ இல்லை. ராஜீவ் கொலையின் முக்கிய நபராகக் (ஓர்பெண்) கருதப்படும்வரை சி.பி ஐ யே அடையாளம் காட்ட முடியாமல் திணறும்போது நான் பார்த்தேன், அதுவும் 'லதா கண்ணனோடு பனை மரத்தடியில் பார்த்தேன்' என்றும் கூறி அப்பெண்ணை குமுதவல்லி அடையாளம் காட்ட முடிந்தது எப்படி? அதைப்பார்க்கும்போது கொலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கும், குமுதவல்லிக்கும் தொடர்பு இருக்கிறது என்றே நினைக்கின்றேன்" என்று கூறினார் கண்ணதாசன்.

மேற்படித் தகவல்களை வெளியிட்டுள்ள தமிழக வார இதழ் ஒன்று, 'வாசகர் கடிதப்பகுதிக்கு வந்த பின்வரும் கடிதத்தையும் வெளியிட்டுள்ளது.' "தி.மு.க. மீது குற்றம் சுமத்திய வாழப்பாடி, ராமமூர்த்தி தானே இப்போது மாட்டிக் கொண்டு தவிக்கிறார். தான் குற்றமற்றவர் என நிரூபிக்க வேண்டிய கஷ்டம் இப்போது அவருக்கு."

# யுத்தத்தை நிறுத்திப் பேச்சு நடத்தஜனாதிபதியிடம்கோரிக்கை

வடக்குகிழக்கில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை அமுல்செய்யுமாறு வலி-வடக்கு ஒய்வூதியர் நலன்புரிச்சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது

இது தொடர்பாக இச்சங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் நாட்டில தற்பொழுது உருவாகியுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் கேட்டுள்ளது

# வயோதிபர் பராமரிப்பு அமைச்சரவைக் கமிட்டி

இலங்கையிலுள்ள வயோதிபர்களைப் பராமரிப்பதற்கும் அவர்களின் நலனுக்குமென அரசாங்கத்தின் கொள்கையையும். நடவடிக்கைத் திட்டத்தையும் வகுப்பதற்காக அமைச்சுப் பிரதிநிதிகள் அடங்கிய கமிட்டி ஒன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சமூக நலன்புரி வீடமைப்பு போக்குவரத்து நிதி, சுகாதாரம், தொழில் மற்றும் கலாசார அமைச்சுக்களின் பிரதிநிதிகள் இக்கமிட்டியில அங்கம் வகிப்பரெனவும் தெரிவிக்கப்படுகிறது

இத் தகவல்களை அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்

## விரிவுரை தொடர் வகுப்பு

யாழ் கரம்பந்தட்ட சம்மேளனம் நடத்தும்; கரபந்தாட்ட புதுமுக மத்தியஸ்தர்களுக்கும் கரப்பந்தாட்ட வீரர்களுக்குமான விரிவுரை வகுப்புகளின் தொடர்ச்சி எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை. நல்லூர் சாதனா பாடசாலையில் காலை 9 மணி தொடக்கம் நடைபெறவுள்ளதாகசம்மேளனச் செயலாளர் கே. ஏகாம்பரம் தெரிவித்துள்ளார்,(16)

# உதைபந்தாட்டப் போட்டி பாடுமீன் சாம்பியன்

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட கலாநிதி சி. பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்த போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று சென்பற்றிக்ஸ கல்லூரி மைதானத்தில் லீக் தலைவர் எஸ். ரி. கணநாதன் தலைமையில் இடம் பெற்றது.

குருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்து ஆடிய நாவாந்துறை சென் மேரிஸ அணியை 3:0 கோல்கள் கணக்கில் தோற்கடித்து சாம்பியன் ஆனது.

தொடக்க முதல் வெகு விறுவிறுப்பாக இருந்த இப் போட்டியில் அரை இடைவெளிக்கு முன்பே பாடுமீன் அணி 3 கோல்களைப் போட்டு தனது வெற்றியை நிச்சயப்படுத்திக் கொண்டது.

முதலாவது கோலை வீரன் எல் நிசனும் இரண்டாவது மூன்றாவது கோல்களை முறையே வீரர்கள் ரீ. டன்சன், ஸி. கீதபொன்கலன் ஆகியோர் போட்டனர்.

நடுவராக ஜீ. எம். செபஸ்தியாம்பிள்ளையும் உதவி நடுவர்களாக எம். எம். புலேந்திரன், எம். பிறான்சிஸ், கப்ரின் டீ ஏ. எம். குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

கடற்புலிகள் விசேட தளபதி சூசை இயக்க கொடியை ஏற்றி சம்பிரதாய முறைப்படி ஆட்டத்தை தொடக்கி வைத்தார்.

யாழ் மேற்றிராணியார் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சாம்பியன்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.

சென்பற்றிக்ஸ கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்சிஸ் யோசப் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஈற்றில் லீக்கின் கௌரவ செயலாளர் எம். கிளியேட் அந்தனிப்பிள்ளை நன்றியுரை வழங்கினார். 16

# தீவக நலன்காக்கும் பிரிவு அங்குரார்ப்பணக் கூட்டம்

இடம்பெயர்ந்திருக்கும் தீவக மக்களின் நலன்களை கவனிக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டுள்ள தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் திரு. மாறன் அவர்களும், யாழ் மாவட்ட உதவி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தங்கன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். அத்துடன் கழகத்தின் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

# அன்னை பூபதி நினைவு நேற்று ஆரம்பமாகின

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நேற்றுத் தமிழீழம் எங்கும் ஆரம்பமாகின. யாழ் பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் அன்னையின் திருவுருவப் படம் வைக்கப்பட்டு மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

பிரதான வீதிகள், ஒழுங்கைகள் என்பன சிவப்பு - மஞ்சல் நிறக் கடதாசிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள. அரசாங்க திணைக்களங்கள் தனியார் ஸ்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பாடசாலைகள் போன்றனவற்றில் அன்னையின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு ஊழியர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர்.

அத்தோடு நேற்று அரியாலை சனசமூக நிலையத்திற்கு முன்பாகப் பெருந்திரளான மக்கள் உண்ணா நோன்பிருந்து அன்னையை ஒரு கணம் நினைவு கூர்ந்தனர். (47)

1986இல் நடந்தது எம். ஜி. ஆர். ஆட்சியே; இது

# ஜெயலலிதாவின் மந்திரி கிருஷ்ணன் 'மறந்த' விடயம்

தமிழக அரசில் வேளாண்மைத்துறை அமைச்சராக உள்ள கு. ப. கிருஷ்ணனுக்கு 1986ஆம் வருடம் தமிழகத்தில் எம். ஜி. ஆர். தலைமையிலான அ. தி. மு. க. ஆட்சிதான் நடந்தது என்பது கவனத்தில் இல்லை எனப் புரிகிறது என்று தமிழகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் நிகழ்ந்த நிகழ்ச்சி பற்றி பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது:

திருச்சியில் நடந்த ஒரு விழாவில் அமைச்சர் கிருஷ்ணன் பேசுகையில் 1986-ல் சிவகங்கையிலே ஒரு விபத்து ஏற்பட்டது. தந்தை காயமடைகிறார். மகன் இறக்கின்றான் நஷ்டஈடு கோரி நீதிமன்றத்திற்கு தந்தை மனு செய்திருக்கின்றார் நீதிமன்றம் அமைந்த காலகட்டத்திலே நீதிமன்றத்திற்குச் செல்லவில்லை எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. நடந்தது எப்போது? 1986-ல் ஆனால் 1992இலே நேற்று தமிழகத்தினுடையகாவல் தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு நீதிமன்றங்கள் காட்டிய அந்த நெறிகளைப் பின்பற்றி நட்டஈடாக 25 ஆயிரம் ரூபா ஏற்பாடு செய்திருக்கிறார் அன்று நடந்த விபத்தைக் கண்டு இன்றைக்குப் புரட்சித் தலைவி வழங்கியிருக்கிறார் என்று சொன்னார் அந்த ஆட்சியில் நடந்த கொடுமைக்கு நிச்சயமாக இந்த அரசில் பரிகாரம் தேடுவோம். எனவே உங்கள் கோரிக்கைகளைப்பற்றி நீங்கள் அச்சப்பட வேண்டாம்.''

பலவருடங்களுக்கு முன் நடந்த விபத்துக்கு முதல்வர் நட்டஈடு வழங்கியுள்ளார் என்பதை அழுத்தமாகக் கூற நினைத்திருக்கிறார் அமைச்சர், ஆனால் 1986-ல் நடந்தது எம். ஜி. ஆர். ஆட்சிதான் என்பது அவர் கவனத்தில் இல்லை எனப் புரிகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுறவு நிதியம்

உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சின் அறிவுரையுடன் 'கூட்டுறவு அபிவிருத்தி விவசாய உற்பத்திப் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளரும் அறிவித்துள்ளார்.

இந்நிதியத்தில் அங்கத்துவம் பெறவிரும்பும் கூட்டுறவுச் சங்கம் ரூபா பத்தாயிரம் கட்டு நிதியாக செலுத்துவதோடு நிதியம் ஆரம்பிக்கப்பட்டபின் அதிலிருந்து கடன் வசதிகளைப் பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 46

# இடம்மாறிய அகதிகளுக்கு சுகாதார வசதிகள் இல்லை

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நீர்வேலி, பன்னாலை, ஊரெழு பகுதிகளில் உள்ள அகதிக் கொட்டகைகளில் உள்ள அகதிக் குடும்பங்கள் சுகாதார வசதிகள் இல்லாது பெரும் கஷ்ட நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்கள் முன்பு பாடசாலைகளில் அகதிகளாக இருக்கும் பொழுது யாழ் செஞ்சிலுவைச்சங்க மருத்துவப் பகுதியினர் கவனித்து வந்ததாகவும் தற்பொழுது செஞ்சிலுவைச் சங்கப் பகுதியினர் இந்த முகாம்களுக்கு வருவதில்லையெனவும் அகதிகள் தெரிவித்துள்ளனர். 06

# வவுனியாக் கடைகளை திறக்குமாறு பணிப்பு

வவுனியா பஸ் நிலையக் கட்டிடத் தொகுதியில் திறக்கப்படாதுள்ள கடைகளைச் சித்திரைப் புதுவருடத்துடனாவது திறந்து வியாபாரத்தில் ஈடுபடுமாறு அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாவிட்டால் இக்கடைகளின் இப்போதைய உரிமைகளை ரத்துச்செய்து புதிய விண்ணப்பதாரிகளுக்குக் கொடுக்க நேரிடலாமென அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# பாதயாத்திரையைக் கண்டித்து கொழும்பில் சுவரொட்டிகள்

எதிர்க்கட்சியினரின் பாதயாத்திரையைக் கண்டித்து கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

தெற்கில் பெரும் சிக்கல் - வடக்கில் கொண்டாட்டம், பாதயாத்திரை பெருமாளின் திருகுதாளம், பௌத்த சிங்களவர்களே புலிகளின் வலைகளில் விழாதிருப்போம் என்ற வாசகங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. 22

## நாளை வரும்

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நேற்றுப் புறப்பட்ட குமண கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது. (42)

கடந்த புதன் கிழமை தமிழக சட்ட சபையில் நடைபெற்ற விவாதத்தில் குறிக்கிட்டு பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா தமது ராஜீவ் காந்தி விசுவாசத்தையும், இந்திய தேசிய விசுவாசத்தையும் வெளிக்காட்டும் விதத்தில் பேசியுள்ளார்.

இதே நேரம் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக தமிழக மக்களின் பாதுகாப்பை தியாகம் செய்ய முடியாது, விட்டுக் கொடுக்க முடியாது என்றும் பேசியுள்ளார்.

இந்தியாவிடமிருந்து தமிழகத்தைப் பிரிப்பது தான் பிரபாகரனதும் விடுதலைப்புலிகளினதும் நோக்கம் என்றும் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக எவ்விதத்தில் தமிழக மக்களின் பாதுகாப்பு பாதிக்கப்படுகிறது என்று இந்த அம்மையார் எடுத்துக் கூறவில்லை.

உலகத்தில் எந்த இனத்தவர் ஆனாலும் அந்த இனத்தவர் எங்கிருந்தாலும் அவர்களின் பாதுகாப்புக்காக குரல் கொடுப்பதை இயல்பாக யாரும் பார்க்கலாம்.

இஸ்ரேலுக்கு எதிராக மேற்காசிய மற்றும் சகல இஸ்லாமிய நாடுகளும் குரல் கொடுப்பதற்கு இதுவே காரணம்.

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்கு இந்தியாவை அவர்கள் நம்பியிருக்கவில்லை என்பதையே தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்டம் காட்டி நிற்பதை இவர்கள் அறியாமல் இருப்பதில் வியக்க ஏதுமில்லை தமிழீழ மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள சிங்கள இராணுவத்துக்கெதிராக போரிடுகின்றனர்.

கன்னடத்தில் ஒரு லட்சம் இந்திய தமிழர்கள் தாக்கப்பட்டனரே அதை இவர்களின் இந்தியா நாடு அல்லது இந்திய தேசியம் தடுத்ததா என்றால் நிச்சயமாக இல்லை.

# இந்திய - இலங்கை தமிழ் மக்கள் பாதுகாப்பு

அந்த தாக்குதல்கள் இலங்கைத் தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவா ஏற்பட்டன? இல்லையே.

ஆகவே இந்தியத் தமிழர்களையே பாதுகாக்க முடியாத ஒரு கையாலகா மாநில அரசின் முதலமைச்சர் தமது மக்களின் பாதுகாப்பை இந்திய தேசியத்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்த ஒருவர் எமக்காக தமது பாதுகாப்பை விட்டுக்கொடுக்க முடியாது எனப் பேசுவது வேடிக்கையானதும் வேதனையானதும் கூட.

தமிழகத்தை இந்தியாவிடமிருந்து பிரித்துவிட புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் முயல்வதாக இவர் குற்றஞ்சாட்டுகிறார்.

பிரிவினைக்கும் விடுதலைக்கும் வித்தியாசம் தெரியாதவர் இவர் விடுதலைக்காக போராடுபவர்களை பிரிவினை வாதிகள் என்று நாமம் சூட்டுபவர்களின் கருத்து இது இந்தியா என்னும் நெல்லிக்காய் மூட்டை நாடு இந்திய தேசியம் என்ற வாய்க்கட்டில் தாங்கி நிற்கிறது அந்த வாய்க்கட்டு மட்டும் உடைந்தால் இந்தியா என்ற நாடே இருக்காது சோவியத் யூனியன் சிதைந்தது போல் சிதைந்து விடும் இதை ஜெயலலிதா போன்ற அதிகாரவர்க்கத்தினர் தூக்கியேறியப்படும் போது தான் உணரக்கூடும்.

பாகிஸ்தானுடன் இணைந்திருக்க வேண்டிய நாடு கஸ்மீர் இந்தியாவுடன் இணைந்து விட வேண்டுமென கஸ்மீரில் பூர்வீகப் பிராமண இனத்தவரான ஜவகர்லால் நேரு மவுண்பேட்டன் பிரபுவுடன் தமக்கு இருந்த செல்வாக்கை பிரயோகித்ததன் காரணமாக இந்தியாவின் ஒரு மாநிலமாக இந்திய சுதந்திரத்தோடு அது இணைக்கப்பட்டது.

அதன்பலன் இருமுறை பாகிஸ்தானுடன் இந்தியா யுத்தம் செய்தது மட்டுமல்ல இன்னும் அந்த மாநிலம் விடுலைக்காக போராடுகிறது அதை பிரிவினை வாதம், தீவிரவாதம், பயங்கரவாதம் எனப் பெயர் சூட்டுகிறது இந்திய தேசிய வாதம்.

உலக நாடுகள் வரிசையில் ஒன்றாக இருந்திருக்க வேண்டிய கஸ்மீரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது தான் உண்மையில் பிரிவினை இந்த இணைப்பிலிருந்து விடுபடப்போராடுவது விடுதலைப்போராட்டமே தவிர பிரிவினைப் போராட்டம் அல்ல.

இந்திய மாநிலங்களிலேயே பிரிவினைப் போராட்டங்கள் நடக்கின்றன மாநிலங்களுக்குள்ளேயே தனிமாநிலப் போராட்டங்கள் நடைபெறுகின்றன.

அசாமில் போடோ இன மக்கள் தனிமாநிலம் கோரிப் போராடுகின்றனர்.

உத்தரப் பிரதேச மலைப் பிரதேச மாவட்டங்கள் எட்டை உள்ளடக்கிய தனிமாநிலம் அமைய வேண்டுமெனவும் பீகாரிலும் தென் மாவட்டங்களுக்கு தனி மாநிலம் வேண்டுமெனவும் பாரதிய ஜனதா கட்சியே கோரிக்கைவிடுத்திருக்கிறது.

மகாராஸ்ரத்திலும் மத்திய பிரதேசத்திலும் கூட மாநிலப் பிரிவுகளுக்கு கிளர்ச்சிகள் நடைபெறுகின்றன எனவே தமிழகத்தை இந்தியாவிலிருந்து பிரிப்பது என்பது இனி இயல்பாகவே நடைபெறப்போகிறது இதற்கு தமிழீழம் வழிகாட்டி நிற்கிறது என்பது வரலாற்று ரீதியாக காலப் போக்கில் மெய்ப்பிக்கப்படும்.

- எஸ். ஜி. எம்.

# தமிழ்நாடு சினிமாபார்த்த விளைவு முதலமைச்சராக ஜெயலலிதா!

தமிழகத்தில் மீண்டும் அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தமைக்கு காரணம் ஜெயலலிதாவின் வீரமோ தியாகமோ அல்ல தமிழன் ஏமாந்தமையே காரணம் எனச் சாடியுள்ளார் இலங்கை அகதிகள் நலவுரிமை சங்கத் தலைவர் ஏ எம் மணவைத்தம்பி

இந்தியா சுதந்திரம் அடைந்து 44 ஆண்டுகள் ஆகியும் இந்திய மக்கள் பத்திரிகை வாசிப்பதில்லை சினிமாதான் பிரதானமாகப் பார்ப்பர் இதன் விளைவு நடிகை முதல்வரானார்.

தமிழ் ஆய்ந்த தமிழனே தமிழ் நாட்டிற்கு முதல்வராக வேண்டும் என்றான் மாரிதாஸன்.

தமிழனுக்காக ஜெயலலிதா இனமொழி போராட்டம் நடத்தினாரா? சிறை சென்றாரா? தமிழ்நாடு பெண்ணைக்கண்டு ஏமாந்துள்ளது இவ்வாறு அவர் தமது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அபாயப்படி வழங்கவில்லை

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு 1990 ஆம் ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையியான ஆறு மாதகால அபாயப்படி இதுவரை வழங்கப்படவில்லை என ஊழியர்கள் தெரிவித்தனர் (46)

## கூட்டுறவு தலைவர்கள் மாநாடு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களின் மாநாடு 22 ஆம் திகதி திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் உள்ள கூட்டுறவுக் கல்லூரியில் நடைபெறும்

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட ஒப்புதலின் பேரிலேயே மேற்படி மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் பற்றி ஆராயப்படவிருப்பதால் சகல தலைவர்களையும் தவறாது இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறும் யாழ் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (அபிவிருத்தி) செ. லிங்கநாதன் அறிவித்துள்ளார் (45)

## திருத்த வேலை

பருத்தித்துறை இறங்குதுறை திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திருத்த வேலைகள் துரிதமடைந்து வருகிறது.

கடந்த பெரும் மழை காற்றினால் இத்துறைமுகம் சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது 08

## லொறிகள் வந்தன

காங்கேசன்துறை களஞ்சியத்திலிருந்து நேற்றும் 8 லொறிகளில் உணவுப் பொருள் ஏற்றிவரப்பட்டன

லொறிகளில் அரிசி, மாவு பருப்பு, சீனி ஆகியன வற்றினை ஏற்றிவந்தன 07

## அரச அதிபர் மீது வழக்கு

நீதிமன்றத்தை அவமதித்தாக மாத்தளை அரசாங்க அதிபர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

இவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

## யாழ். ஆஸ்பத்திரிக்கு எரிபொருள் கப்பலில் வந்தது

இம்மாதத்தில யாழ் பொது மருத்துவ மனைக்கு போதியளவு எரிபொருள் கப்பலில் இருதடவைகள் வந்துள்ளன.

60 பெரல் டீசல், 51 பெரல் மண்ணெண்ணெய், 6 பெரல் பெற்றோல் ஆகியன வந்து சேர்ந்துள்ளன

இதனால் வழமைபோல் ஜெனரேட்டர் மின்சாரம் செயற்பட்டுவருகிறது. 07

## நாய் கடித்தவர் இருவர் அனுமதி

நேற்று இருவர் நாய்கடிக்குள்ளாகி படுமோசமாக காயப்பட்டநிலையில் யாழ் ஆஸ்பத்திரி வடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

100க்கு மேற்பட்டோர் மூன்று மாதத்தில் விசர்நாய் கடிக்கு உள்ளாகியிருக்கின்றனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன' 07

## அன்னைபூபதி நினைவு நிகழ்ச்சி

நாளை சனிக்கிழமை நாகர் கோவில் பிரதேசத்தில் அன்னைபூபதி நினைவாக காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடையாள உண்ணாவிரதமும் மாலை 7 மணிக்கு நாகதம்பிரான் கோவிலடியில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

## சண்டிலிப்பாய் பகுதி மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

சண்டிலிப்பாய் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தமக்கு எதுவித நிவாரண உதவிகளும் இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்து நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடாத்தினர்.

மானிப்பாய் புனித அந்தோனியார் தேவாலய முன்றலிலிருந்து ஆரம்பமான இப்பேரணி நண்பகல் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் அலுவலகத்தையடைந்தது

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

கொழுத்தும் வெய்யிலையும் பாராது பெண்கள் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் சுலோகங்களுடன் இதில் கலந்துகொண்டனர் (07-47-04)

★ லலித் சொல்கிறார்

## இந்த அரசின் ஆட்சியில் வங்கிகளில் வங்குரோத்து

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு யுத்தத்தினால் ஒருபோதும் தீர்வுகாண முடியாது அரசியல் தீர்வு மூலமே இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்

இவ்வாறு முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி அம்பீமனையில் இடம்பெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார் தொடர்ந்து பேசிய அவர்

இலங்கை வங்கி, மக்கள் வங்கி இரண்டும் வங்குரோத்து அடைந்து விட்டதாக அரசு கூறுகிறது இதிலிருந்து ஆட்சி எந்த நிலையில இருக்கிறது என்பது தெரிகிறது என்றார்

## மகனை விடுவிக்ககோரி தந்தை நீதிமன்றில் மனு

கட்டுப்பெத்த பல்கலைக்கழக மாணவன் ரணவக(26) என்பவரை விடுவிக்கக்கோரி அவரது தகப்பன் அப்பீல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் இம் மாணவனும் மேலும் 15 பல்கலைக்கழக மாணவர்களும் பொகித்தர முல்ல விகாரையில வைத்து கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

## பிரதித்தபால் மா அதிபர் வடமாகாண அலுவலகம்

வட மாகாணத்திணைக்கள பிரதித் தபால்மா அதிபர் அலுவலகம் விரைவில யாழ்ப்பாணத்தில திறக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இந்த அலுவலகத்தில பிரதித் தபாலமா அதிபராக எம். எம். சேதுகாவலர் நியமனம் பெறலாமென தபால பகுதி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது

இவர் முன் வடமாகாண தபால அத்தியட்சகராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது 06

சமாதான...

ஆயுதங்களும் எம்மால் கைப்பற்றப்பட்டன இதனால் அரசாங்கம் எம்முடன் நின்று பிடிக்காத அளவுக்கு இந்த போர் மாறியுள்ளது

பாராளுமன்றத்திலும் தற்பேது ஸ்ரீலங்கா அரசு வடகிழக்கில் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு வலுவடைந்து வருகிறது.

அத்துடன் சர்வதேச அரங்கு அதாவது மேற்கு ஐரோப்பிய நாடுகளில கூட வடக்கு கிழக்கில் தமிழனுக்குரிய சுயநிர்ணய உரிமைகள் வழங்க வேண்டும் என பல குரல்கள் எழுப்பப்பட்டுவருகின்றன என்றார்.

இக்கூட்டத்தில் விகாமம் மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பொறுப்பாளர் கலையரசன், தீவக மகளிர் முன்னணி பொறுப்பாளர் அன்பரசி, மரிசலாப்பா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்

தூதரக...

அபராதத் தொகையான 2 கோடி 60 லட்சம் ரூபாவை செலுத்த தவறியதால இவர் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

புலிகளின்...

புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கடலிலும், தமிழகத்திலும் பொலிஸாரும் கடற்படையும் தீவிரமாக செயற்படுவது குறித்து படையினருக்கு ஜெயலலிதா தனது நன்றியையும் சபையில் தெரிவித்தார்,

தொடர்ந்து உரையாற்றிய ஜெயலலிதா சேலம் ஏற்காடு தொலை தொடர்பு நிலையத்தில ஏதோ ஓர் சக்திவாய்ந்த அந்நிய வயர்லஸ் செய்தி குறுக்கிடுகிறது எனவும், இது எவ்வாறு எங்கிருந்து இயங்குகிறது என்பதை பொலிஸார் கண்டுபிடிக்க முடியாமல் உள்ளது என்றார்

நேற்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா இத்தகவல்களை வெளியிட்டபோது சபை உறுப்பினர்கள் திக்பிரமை பிடித்து திகைத்துக் காணப்பட்டதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

## உயர்தரப்பரீட்சை ஏப். நடைபெறும்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் அடுத்தமாதம் திட்டமிட்டபடி க பொ. த. உயர்தர விசேட பரீட்சை நடைபெறும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இப்பரீட்சை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

## கொழும்பில் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறதாம்

கொழும்பும் அதன் சுற்றுப் புறப்பகுதிகளிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை தோன்றியுள்ளதாக நேற்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கையை மேற்கோள் காட்டி அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் இப்படியான பாதுகாப்பற்ற சூழ்நிலை கொழும்பினுள் ஊடுருவியுள்ள புலிகள் அணியினாலேயே ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடுள்ளது.

★ எயர்லங்கா விவகாரம்

## நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது

எயர் லங்கா ஆறு புதிய எயர் பஸ் விமானங்களை வாங்கியதுதொடர்பாகஎதிர்க்கட்சிகளால் அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளது

பிரேரணைக்கு ஆதரவாக 66 வாக்குகளும் எதிராக 120 வாக்குகளும் கிடைத்து நம்பிக்கையில்லா பிரேரணை 54 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

## இராணுவ அதிகாரியின் திருமலைவீட்டில்கொள்ளை

திருகோணமலை பிரிட்டிக் கோட்டையில் உள்ள இராணுவ இரண்டாவது லெப்டினன்ற் ஒருவரின் வீட்டில் பட்டப்பகலில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரியின் மனைவி தனது பிள்ளையை பாடசாலையலிருந்து கூட்டிவரச் சென்றபோதே இ கொள்ளை இடம் பெற்றுள்ளது

பல ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் ரொக்கப் பணம் என்பனவே கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அவர் முறையிட்டுள்ளார்,

## ஜே. வி. பி. ஆயுதங்கள் மீண்டும் தெற்கில் மீட்பு

ஜே. வி. பி. நடவடிக்கைகள் மீண்டும் தெற்கில் தலைதூக்கியிருப்பதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் வின்சன்ட் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில அவசரசட்ட விவாதத்தின் போது கூறினார்

எம்பிலிபிட்டியில், வலணமுல்ல, மினுவாங்கொட, ஹோமகம ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுளளது பல ஜே வி, பி. இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்எனவும் அவர் கூறினார்

ஜே வி பியினர் தமது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்

## கப்பலில் வந்த தபால்கள் இன்று விநியோகம்

கொழும்பிலிருந்து கோமாரி கப்பலில் பருத்தித்துறைக்கு வந்த 44 தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதம தபால கத்திற்கு எடுத்து வரப்பட்டன

தபால் பொதிகள் நேற்று தரம்பிரிக்கப்பட்டுள்ளன. யாழ் பிரதம தபாலகத்துக்குரிய தபால்கள் இன்று வழமைபோல் விநியோகிக்கப்படவுள்ளதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏனைய தபால் பொதிகள் குடாநாட்டு தபாலகங்களுக்கு வழமை போல அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். 6

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் திருவனந்தினரால் யாழ்கல்வியங்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 20-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது